RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 274 | அக்டோபர் 7, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தேர்தல் ஆணையத்தை நோக்கி எதிர்க்கட்சிகள் பேரணி: ராகுல், பிரியங்கா உள்ளிட்டோர் தடுத்து நிறுத்தம்



புதுடெல்லி: அக்.7-

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் தேர்தல் ஆணையத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குள் நுழைய முயன்ற அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவுகிறது.

வாக்காளர் பட்டியலை புதுப்பிக்கும் நோக்கில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் 13 கோடி வாக்காளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. மேலும், புதிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான படிவம் 6-ல் முறைகேடான முறையில் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த குற்றச்சாட்டுக்களை தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களின் கருத்துக்களை ஏற்காமல் செயல்பட்டதாக செய்தி வெளியாகியது. இதையும் தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இந்நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி வலக வலியுறுத்தி காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் டெல்லியில் இன்று பேரணியில் ஈடுபட்டன.

நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி புறப்பட்ட இந்த பேரணி புறப்பட்டது. இதில், காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட எம்பிக்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியில், பிஜு ஜனதா தளம் கட்சியின் எம்பிக்களும் கலந்து கொண்டனர். இண்டியா கூட்டணியில் இடம்பெறாத இக்கட்சி, இன்று நடைபெற்ற பேரணியில் பங்கேற்றது. நவீன் பட்நாயக்கின் அறிவுறுத்தலின்படி பேரணியில் பங்கேற்றதாக அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் மனஸ் மங்கராஜ் தெரிவித்தார்.

இந்த பேரணியை முன்னிட்டு, தேர்தல் ஆணைய அலுவலகப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. போலீஸார் பெருமளவில் குவிக்கப்பட்டதோடு, ஏராளமான தடுப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தேர்தல் ஆணைய அலுவலக வளாகத்துக்குள் நுழைய முயன்றவர்கள் தடுக்கப்பட்டனர்.

ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோரும் தடுக்கப்பட்டனர். இதையடுத்து அவர்கள், தடுப்புகள் மீது ஏறி உள்ளே நுழைய முயன்றனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து பேரணியில் ஈடுபட்ட எம்பிக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

# "இதுதான் தவெக போற்றும் ஜனநாயகமா!" - செவிலியர்கள் கைதுக்கு ஸ்டாலின் கண்டனம்



சென்னை: அக்.7-

பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அறவழியில் போராடிய செவிலியர்களை இரவோடு இரவாக வலுக்கட்டாயமாகக் கைது செய்த தவெக அரசை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "கண்துடைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, முதுகில் குத்தும் தவெக அரசின் துரோகத்திற்குச் செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?

பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட தங்களது வாழ்வாதார உரிமைகளுக்காக அறவழியில் போராடிய செவிலியர்களைக் காவல்துறையைக் கொண்டு கைது செய்த தவெக அரசின் அராஜக நடவடிக்கைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராடும் செவிலியர்களுடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்திட மனம் வராத துரோக தவெக அரசுக்கு, ஈவு இரக்கமின்றி அவர்களைக் கைது செய்ய மட்டும் எப்படி மனம் வந்ததோ? போராடிய செவிலியர்களின் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கைது செய்ததாக அவர்களது சட்ட ஆலோசகரே குற்றம்சாட்டியிருக்கிறார். தொடர்ந்து, போராட்டக் களத்திலிருந்த செவிலியர்களும் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது போராட்டக் களத்திற்குச் சென்று ஆதரவு; தேர்தல் வந்தபோது பணி நிரந்தரம் செய்வோம் என்ற வாக்குறுதி; ஆட்சிக்கு வந்ததும் அதே கோரிக்கையை முன்வைத்தால் காவல்துறை நடவடிக்கை. முரண்பாட்டு மூட்டையாக விளங்கும் முதல்வர் விஜய்யும், அவரது நிர்வாகத் திறனற்ற துக்ளக் நடவடிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கும் அதிமேதாவி அமைச்சர்களும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

போராட்டக் களத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையிலும், செல்போன் டார்ச் வெளிச்சத்தில் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்த செவிலியர்களை இரவோடு இரவாக வலுக்கட்டாயமாகக் கைது செய்ததுதான் தவெக கூறும் 'மாற்றமா'? இதுதான் அவர்கள் போற்றும் ஜனநாயகமா?

போராடிய செவிலியர்களை நோக்கி பெண் காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி "வேண்டாம் உங்க உயிர் முக்கியம்" என மிரட்டியதுதான் ஜனநாயக வில்லனின் குரலா என்பதைக் காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வர் விளக்குவாரா? அல்லது, செவிலியர்களை மிரட்டி குண்டுகட்டாகக் கைது செய்த பெண் காவலர்களின் செயலை "சிங்கப்பெண் in action" என ரீல்ஸ் செய்து தனது virtual abuser-கள் மூலம் டிரெண்ட் செய்து விளம்பரம் தேடுவாரா?" என்று காட்டமாக வினவியுள்ளார்.

# "வேளாண் துறை செயலாளர் நியமனம் எப்போது?" – அரசுக்கு உதயநிதி கேள்வி



சென்னை: அக்.7-

விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக ஆட்சியில் வேளாண்மை துறை செயலாளர் நியமனம் எப்போது? என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைச் செயலாளராக இருந்த சங்கர் ஐஏஎஸ் தொல்லியல் ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகப் போகிறது. ஆனால், இப்போது வரை வேளாண் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் புதிய செயலாளர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது, விவசாய பெருமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்ட வேளாண் துறை போன்ற ஒரு முக்கியத் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் செயலாளர்கூட இல்லாமல் இருப்பதை என்ன காரணம் சொல்லி இவர்களால் நியாயப்படுத்த முடியும்?

பருவமழை தொடங்கவுள்ள நேரத்தில், வேளாண் துறைக்கு நிலையான நிர்வாகத் தலைமையும், துரிதமான ஒருங்கிணைப்பும் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய முடிவுகள் தாமதமின்றி எடுக்கப்படுவதற்கும், மாவட்ட அளவிலான பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் இது அவசியமானது. இதனை கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய, துறை அமைச்சரும் முதல்வரும் வேறு வேலைகளில் தான் மும்முரம் காட்டுகின்றனர்.

தவெக ஆட்சிக்கு வந்ததுமே, பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி செய்தார்கள். இயற்கையால் குறுவை பொய்த்து, தவெக அரசின் சிந்தனையற்ற செயல்பாட்டால் சம்பா சாகுபடியும் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. இப்படித் தொடர் ஏமாற்றங்களால் விரக்தியில் உள்ள விவசாயப் பெருமக்கள், தமிழ்நாடெங்கும் போராடி வருகின்றனர்.

நேற்றுகூட , கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், முத்துப்பேட்டையில் விவசாயிகள் சாலை மறியல் செய்துள்ளனர். தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகள் வீராணம் ஏரியில் இறங்கிப் போராட்டம் நடத்தியுள்ளனர். தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, சென்னையில் வருகிற 14 ஆம் தேதி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாகத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

இத்தகைய சூழலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைக்கு அனுபவம் வாய்ந்த மூத்த ஐஏஎஸ் அதிகாரி நியமிக்கப்பட்டு, விவசாயிகளின் துயர் துடைப்பதற்கான பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆனால், அந்தத் துறையைப் பொறுப்பு ஏற்பாட்டில் விட்டிருப்பது, வேளாண்குடிப் பெருமக்களின் நலனில் இந்த அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது. 'செயல்படாத அமைச்சர், இல்லாத செயலாளர்' எனத் தவெக ஆட்சியைப் போலவே வேளாண் துறையும் திண்டாடுகிறது.

உலகுக்கே உணவளிக்கும் உழவைக் காப்பாற்றுவதில் இனியும் காலதாமதம் செய்யாமல், புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தூங்குமூஞ்சி தவெக அரசை வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



# மைசூரு தசரா விழாவுக்கு தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு

பெங்களூரு: அக்.7-

உலகப் புகழ்ப்பெற்ற மைசூரு தசரா விழா வரும் 11-ம் தேதி தொடங்கி 21ம் தேதிவரை 10 நாட்கள் நடைபெறுகிறது. கர்நாடக அரசின் சார்பில் பிரம்மாண்டமாக கொண்டாடப்படும் இவ்விழாவில், வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களும், வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் லட்சக்கணக்கில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் நேற்று மைசூருவில் அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், மாவட்ட எம்பி, எம்எல்ஏக்கள் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்தினார். அப்போது 10 நாட்களும் நடத்த வேண்டிய பல்வேறு கலை நிகழ்வுகள் குறித்தும், சிறப்பு விருந்தினர்களை அழைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

டி.கே.சிவகுமார் முதல்வரான பின்னர் நடைபெறும் முதல் தசரா விழா என்பதால் இதனை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டதாக தெரிகிறது.

இந்நிலையில் கர்நாடக அரசின் சார்பில் விமான கண்காட்சியை தொடங்கி வைக்குமாறு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல தசராவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் விரைவில் தமிழக முதல்வர் விஜய்க்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு விடுப்பார் என மைசூரு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# "செவிலியர்கள் மீதான காவல்துறை அராஜகம் கொடூரத்தின் உச்சம்" – இபிஎஸ் காட்டம்

சென்னை: அக்.7-

"செவிலியர்கள் மீது காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம். செவிலியர்கள் மீது வழக்கு பதியாமல், அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அறவழியில் போராட்டம் நடத்திய செவிலியர்கள் மீது இன்றைய தவெக அரசின் காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம்.

"பாசிசம், பாயாசம்" என்று ரைமிங் வசனங்கள் பேசிய முதல்வரின் கையில் இருக்கும் காவல்துறை, உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செவிலியர்கள் மீது நடத்தியுள்ள பாசிச அக்கிரமத்தை எப்படி இந்த ரீல்ஸ் முதல்வர் நியாயப்படுத்துவார்?

ஆட்சிக்கு வருவதற்கு முன், இதே செவிலியர்கள் முன் நின்று உங்கள் கட்சி நிர்வாகிகள், இன்றைக்கு அமைச்சராக இருப்பவர்கள் பேசியது எல்லாம் நினைவில் இருக்கிறதா? ஆட்சிக்கு முன் ஒரு பேச்சு, ஆட்சிக்கு பின் அதற்கு மாறான செயல் என்பது தான் மாற்றமா? தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவுவது குறித்து மக்கள் பிரச்சினையை சுட்டிக்காட்டினால் கூட ஏற்றுக்கொள்ள மனமின்றி அவதூறுகளை அள்ளி வீசும் நபராக இருக்கிறார் இன்றைய சுகாதாரத் துறை அமைச்சர்.

தனது துறையைச் சார்ந்த செவிலியர்கள் போராடுவது குறித்து ஒரு வார்த்தை பேசினாரா? செவிலியர்களிடம் வந்து பேச்சுவார்த்தை நடத்துவதை விட அப்படி என்ன பெரிய வேலை இருக்கிறது இந்த அமைச்சருக்கு?

போராடும் இடத்தில் மின்சாரத்தை துண்டிப்பது, பேச்சுவார்தை எனக் கூறி அழைத்துச் சென்று கைது செய்வது என மிகவும் கீழ்த்தரமாக ஒரு போராட்டத்தை அணுகியுள்ள இன்றைய ஆச்சரியக்குறி அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கைது செய்யப்பட்டுள்ள செவிலியர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்கள் மீது எந்த வழக்கும் பதியாமல் இருப்பதை உறுதி செய்து, ஜனநாயக ரீதியாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.



■ மதுரை மாவட்ட, அரசு மருத்துவக் கல்லூரி வெள்ளிவிழா கலையரங்கத்தில் தேசிய தன்னார்வ தகுதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற குருதிக்கொடையலாளர்களின் உறுதிமொழியேற்பு மற்றும் பாராட்டு விழாவில் குருதிக்கொடையலாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார். முன்னதாக மதுரை மருத்துவக் கல்லூரியில் அங்கமாக விளங்கும் மருத்துவத் துணை அறிவியல் பிரிவு, மருந்தியல் கல்லூரி, செவிலியர் கல்லூரி மற்றும் செவிலியர் பள்ளி ஆகிய பிரிவுகளுக்கு இரத்தக் கொடையாளர்கள் மன்றத்தின் கிளைகளை துவக்கி வைத்தார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர்அ.கல்லாணை ,இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு. அருள் சுந்தரேஷ்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழக வெற்றிகழகம் கிழக்கு மாவட்டம் சார்பில் தூதூர்மட்டத்தில் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் இளைஞர்களின் விளையாட்டு திறமையை ஊக்குவிக்க உற்சாகப் போட்டிகள்

நீலகிரி. அக்.7–

நீலகிரி மாவட்டம் தூதூர்மட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின்படி, தமிழக வெற்றிக் கழகத்தின் நீலகிரி கிழக்கு மாவட்டம் சார்பில் இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் மக்கள் நல நிகழ்ச்சிகள் உற்சாகமாக நடைபெற்றன.

நீலகிரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் D. ரமேஷ் B.Com., TTC மற்றும் மாவட்ட கழக செயலாளர் S. பாமா ரமேஷ் ஆகியோர் தலைமையில், மாவட்ட வாக்குச்சாவடி அணி அமைப்பாளர் P.S.K. கார்த்திக் DME., B.E. ஏற்பாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





இதன் தொடக்கமாக காலை 10 மணிக்கு மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து காலை 11 மணிக்கு புதிய கழக அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடம் மறைந்துள்ள விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக ஏராளமான மகளிர் அணியினர் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டது நிகழ்ச்சிக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேலும், இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகாமல் ஆரோக்கியமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் போதை மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்கள் விளையாட்டு மற்றும் சமூக நலச் செயல்பாடுகளில் அதிகளவில் ஈடுபட வேண்டியதன் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து மதியம் 1 மணிக்கு அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டு, குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களை விளையாட்டின் மூலம் ஊக்குவிப்பதுடன் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் P.S.K. கார்த்திக் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் அனைத்து தரப்பினரின் பாராட்டையும் பெற்றன.

நிகழ்ச்சியில் நகரம், ஒன்றியம், ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட மற்றும் நகர சார்பு அணி அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், தொண்டர்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# திருப்பத்தூர் மாவட்டம் அம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பொதுமக்கள் பங்களிப்புடன் கட்டப்பட்ட கலையரங்கம் திறப்பு விழா

திருப்பத்தூர், அக்.7–

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா நாட்றம்பள்ளி ஒன்றியம் அம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பொதுமக்கள் பங்களிப்புடன் கட்டப்பட்ட கலையரங்கம் திறப்பு விழா 05/10/2026 அன்று காலை 10 மணியளவில் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.பி. முருகேசன் தலைமையில் கலையரங்கம் கட்டிட குழுவினர் ஒன்றிய கவுன்சிலர் செந்தில்குமார், பள்ளி தலைமை ஆசிரியர் எட்வர்ட் ராஜ்குமார், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சிவாஜி, பள்ளி மேலாண்மை குழு தலைவர் சங்கர், பள்ளி தூதுவர் பாலசுப்பிரமணி, கல்வி குழு தலைவர் ராஜ்குமார், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் நாராயணமூர்த்தி, பொருளாளர் பாபு, தொழிற்கல்வி ஆசிரியர் ரமேஷ், உடற்கல்வி ஆசிரியர் கிரிதரன் முன்னிலையில் ரிப்பன் வெட்டி பள்ளி மாணவ மாணவிகள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சமூக ஆர்வலர் கேசவன் ( சென்னை) தொழிலதிபர் ஆர்.ஆர்.வாசு, பாலாறு பாதுகாப்பு விவசாய சங்க தலைவர் அசோகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பாரதி சேட்டு, பாரி, ஏழுமலை, காயத்ரி தேவி, தனலட்சுமி பெருமாள், மோகனவேல், தலைமை ஆசிரியர்கள் ஓய்வு காந்திமதி சம்பத், மாதர் சங்க மாவட்ட செயலாளர் இந்துமதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் பாலாறு பாதுகாப்பு விவசாய சங்க பிரதிநிதிகள் அம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்திற்கு நன்கொடையாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# நீலகிரி மாட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி. அக்.7–

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 144 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் முதலமைச்சரின் சாலை விபத்து நிவார நிதி திட்டத்தின் கீழ், குன்னூர் பகுதியில் சாலை விபத்தில் உயிரிழந்த 2 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் நிதி உதவி பெறுவதற்கான ஆணையினையும், கொடுங்காயம் அடைந்த 2 நபர்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் சிறுகாயம் அடைந்த 2 நபர்களுக்கு தலா ரூ.10,000/- நிதி உதவி பெறுவதற்கான ஆணையினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, குன்னூர் சார் ஆட்சியர் காஞ்சன் சௌத்ரி தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) தீபசித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி அக்.7–

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 377 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக,மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பெரியகுளம் சார் ஆட்சியர் .தவலேந்து, கூடுதல் காவல் கண்காணிப்பாளர். கலைக்கதிரவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர்.கவிதா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) .கதிர்வேல், உதவி ஆணையர் (கலால்).பஞ்சாபகேசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நியாயமான விசாரணையின்றி டாஸ்மாக் ஊழியர்களை பணிநீக்கம் செய்யக் கூடாது: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, அக்.7–

மது பாட்டிலுக்கு கூடுதல் கட்டணம் வசூலித்ததற்காக நியாயமான விசாரணை நடத்தாமல் டாஸ்மாக் பணியாளர்களை பணிநீக்கம் செய்யக்கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால், தற்காலிக பணிநீக்கம், பணியிடமாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளும், தொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால், குற்ற குறிப்பாணை அனுப்பி விசாரணை நடத்தி பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என, டாஸ்மாக் நிர்வாகம் கடந்த ஜூலை 24-ஆம் தேதி சுற்றறிக்கை பிறப்பித்தது.

இந்த சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும் என தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலச் சங்கத்தின் செயலாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.சுரேந்தர், இயற்கை நீதியைப் பின்பற்றாமல், பணியாளர்களுக்கு எதிராக எந்த ஒரு தண்டனை நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது.

நியாயமான, முறையான விசாரணைக்குப் பிறகுதான், தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். அவ்வாறு தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு தொழிலாளர்கள் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க போதுமான அவகாசத்தை வழங்க வேண்டும்.

எனவே, இந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும், தண்டனை விதித்தாலும், அது இயற்கை நீதி, பணி விதிகள் மற்றும் சட்ட விதிகளைப் பின்பற்றியே இருக்க வேண்டும்.

தொழிலாளர்கள் தங்கள் தரப்பு விளக்கத்தை அளிக்க நியாயமான விசாரணை நடத்தாமலும், எந்த தொழிலாளர்களும் தண்டிக்கப்படவோ, இடமாற்றம் செய்யப்படவோ, பணிநீக்கம் செய்யப்படவோ கூடாது என உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

# குரோம்பேட்டை பாரதிபுரத்தில் 60 ஆண்டு அரசமரம் சாய்ந்தது சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சி : பசுமைத் தாயகம் மற்றும் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் இரங்கல் நிகழ்ச்சி

குரோம்பேட்டை, அக்.7–

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை பாரதிபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் சுமார் 60 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு நிழல் மற்றும் பசுமை வழங்கி வந்த பழமையான அரசமரம் சாய்ந்த சம்பவம் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து பசுமைத் தாயகம் மற்றும் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் இணைத்து மரத்திற்கு இரங்கல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில் பசுமைத் தாயகம் சார்பில் பசுமைத் தாயகம் மாநில துணைச் செயலாளர் ஐ.நா. கண்ணன், மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தி.கார்த்திக் கண்ணன் ஆகியோர் கண்டனம் தெரிவித்தார்

இந்த மரம் சாய்ந்ததற்கான காரணம் குறித்து அரசு நிர்வாகம் முழுமையான ஆய்வு நடத்த வேண்டும். மரத்தில் மருந்து வைக்கப்பட்டதா என்பது உள்ளிட்ட அனைத்து சாத்தியக் கூறுகளையும் அறிவியல் ரீதியாக ஆய்வு செய்து உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டும்





திருக்கோயில் தக்கார் சரவணகுமார் நிர்வாகம் செய்வதில்லை அவருக்கு பதிலாக பணி நிறைவு பெற்ற முன்னாள் அர்ச்சகர் சுந்தர் நிர்வாகம் செய்து வருகிறார் அதனால் செய்பவரே பொறுப்பாவார் அதன் அடிப்படையில் முன்னாள் அர்ச்சகர் சுந்தர் என்பவரை விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

மேலும், சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, மரத்தின் நிலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் குறித்து அதிகாரப்பூர்வமாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் மூத்த குடிமக்கள் நலச் சங்கத் தலைவர் மீனாட்சி சுந்தரம், ஆர்.எஸ்.எஸ். தலைவர் நரேந்திரன் ஜி, பாரதிபுரம் வீட்டு உரிமையாளர் பொதுநலச் சங்க செயலாளர் யோகி நேரு, இணைச் செயலாளர்கள் சந்தோஷ் குமார், பசுமைத்தாயகம் நிர்வாகிகள் வளர்மதி, குப்பன், வேதகிரி, சசிகுமார், மணிகண்டன் மற்றும் சமூக ஆர்வலர்கள் சரவணன், லயன் வரதன், துளசிதரன், லயன் ரியாஸ் அகமது, துளசி, முத்து, திருநாவுக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பதிவு செய்தனர்.

# தமிழகம் “இடைத்தேர்தல் என்றாலே ஆளும்கட்சி தான் வெற்றி பெறும் என்பதில்லை” - திமுக வேட்பாளர் பரந்தாமன்

மதுராந்தகம், அக்.7-

“இடைத்தேர்தல் என்றாலே ஆளும்கட்சிதான் வெற்றிபெறும் என்றெல்லாம் ஒன்றும் இல்லை. இந்த முறை இடைத்தேர்தலில் திமுக வெற்றிபெறும். மதுராந்தகத்தில் திமுக வெற்றி பெறும்” என திமுக வேட்பாளர் பரந்தாமன் தெரிவித்தார்.



மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த வாக்குப் பதிவு மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. தொடர்ந்து வாக்குகள் வரும் 9-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (தவெக), பரந்தாமன் (திமுக), கணிதா சம்பத்(அதிமுக), சுகந்தி (மார்க்சிஸ்ட்), ஜானகிராமன் (நாம் தமிழர்) மற்றும் சுயேட்சைகள் உட்பட 27 பேர் களத்தில் உள்ளனர்.

மதுராந்தகம் தொகுதியில் விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில், திமுக வேட்பாளர் பரந்தாமன் வாக்குச்சாவடிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், “மக்கள் உற்சாகமாக வாக்களிக்கின்றனர். மக்கள் வாக்களிக்க வரிசையில் நிற்கும்போது கூட முகமலர்ச்சியோடு என்னை வரவேற்கிறார்கள். அவர்கள் ஒரு நல்ல முடிவை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மதுராந்தகம் வாக்காளர்கள் திமுகவுக்கு ஒரு நல்ல செய்தியை சொல்ல காத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் எதையும் நான் மீறவில்லை. தவெகவின் புகாரை சட்டரீதியாக சந்திக்கத் தயாராக உள்ளேன். தவெகவின் குதிரைபேரத்தை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டதால் ஆதவ் அர்ஜுனா பதறிவிட்டார். அவர் கொடுத்துள்ளது உப்புசப்பில்லாத புகார். அந்தப் புகாரை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றால் திமுக சந்திக்கத் தயாராக உள்ளது.

இடைத்தேர்தல் என்றாலே ஆளும்கட்சிதான் வெற்றி பெறும் என்றெல்லாம் ஒன்றும் இல்லை. இந்த முறை இடைத்தேர்தலில் திமுக வெற்றிபெறும். மதுராந்தகத்தில் திமுகவின் உதயசூரியன் சின்னம் வெற்றி பெறும். வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. சில இடங்களில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டது, அவை உடனடியாக சரி செய்யப்பட்டது. காவல் துறை, தேர்தல் அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு அளிக்கின்றனர்” என்றார்.

# சர்ச்சை வீடியோ விவகாரம்: தவெக வேட்பாளர் சத்யபாமா மீது தேர்தல் ஆணையத்தில் திமுக புகார்

சென்னை, அக்.7-

அமைச்சர்கள் தங்குவதற்கு ரூ.14 லட்சம் செலவு செய்துள்ளதாகவும் தாராபுரம் தொகுதி தவெக வேட்பாளர் சத்யபாமா பேசிய வீடியோ மீது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க திமுக சார்பில் அக்கட்சியின் எம்எல்ஏ ஆஸ்டின் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார்.



கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவழித்ததாகவும், இம்முறை அமைச்சர்கள் தங்குவதற்கு ரூ.14 லட்சம் செலவு செய்துள்ளதாகவும் தாராபுரம் தொகுதி தவெக வேட்பாளர் சத்யபாமா பேசியது போன்ற வீடியோ நேற்று முதல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் திமுக சார்பில் அக்கட்சியின் எம்எல்ஏ ஆஸ்டின் இன்று புகார் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆஸ்டின், “ சட்டப்பேரவைத் தேர்தலில் ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.40 லட்சம் மட்டுமே செலவு செய்ய முடியும். தேர்தல் விதிமுறைகள் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி ஒரு வேட்பாளர் குறிப்பிட்ட அளவை தாண்டி செலவு செய்தால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும். 3 ஆண்டுகளுக்கு அவரால் தேர்தலில் போட்டியிட முடியாது. அதிகபட்சமாக 6 மாத காலம் சிறை தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் விதிமுறை.

இந்த அடிப்படையில் அமைச்சர்கள் தங்குவதற்கு 14 லட்சம் ரூபாய் செலவு செய்ததாக சத்யபாமா வாக்குமூலமாக கொடுத்திருப்பதை ஆய்வு செய்து, அது வேட்பாளர் செலவில் சேர்க்கப்படாமலோ, வங்கிக் கணக்கில் பரிமாற்றம் இல்லாமலோ இருக்குமேயானால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளோம்.

அந்த வீடியோ தவறாக சித்தரிக்கப்பட்டதாக சத்யபாமா கூறுகிறார். ஆனால் அந்த வீடியோ போலியானதாக தெரியவில்லை. கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவு செய்ததாக சத்யபாமா கூறியுள்ளார். அதன்படி ஆய்வு செய்தால், சத்யபாமா தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். 6 மாதம் சிறைதண்டனையும், 3 ஆண்டுகள் தேர்தலில் நிற்க தடையும் விதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தாராபுரத்தில் தவெக சார்பில் காமாட்சி விளக்கும், புடவையும் சத்யபாமா படத்துடன் வீடு வீடாக சென்று கொடுத்துள்ளனர். தவெக சார்பில் டிபன் பாக்ஸும், பணமும் கொடுத்ததாக சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம் கூறியுள்ளார். இது தொடர்பாகவும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளோம்” என்றார்.

# நல்லெண்ணெய் விலை திடீரென அதிகரிப்பு - மாதாந்திர மளிகை செலவை நினைத்து கலக்கத்தில் பொதுமக்கள்

சென்னை. அக்.7-

தமிழகத்தில் எள் விளைச்சல் சரிவடைந்துள்ளதன் காரணமாக, அன்றாட சமையலில் நல்லெண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.45 வரை அதிரடியாக உயர்ந்துள்ளது. இதனால் வீட்டு செலவுகளை கவனித்து கொள்ளும் நபர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளா கியுள்ளனர்.




நல்லெண்ணெய் மட்டுமின்றி, சமையலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் சூரியகாந்தி எண்ணெய் (Sunflower Oil) விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இது குறித்து பேசியிருக்கும் வியாபாரிகள், வெளிமாநில வரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால் மார்க்கெட்டில் எள் வரத்து சரிந்துள்ளதக்க குறிப்பிட்டனர். எனவே எள் விலை உயர்ந்துள்ளது.

இந்த சூழலில் தான் எள்ளை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் நல்லெண்ணெய் விலை லிட்டருக்கு 45 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பிரபல நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்படும் நல்லெண்ணெய் விலை லிட்டருக்கு 365 ரூபாயிலிருந்து 410 ரூபாயாக அதிகரித்து உள்ளது.

அதே நேரம் சூரியகாந்தி எண்ணெயின் விலையும் ரூ.165-லிருந்து, ரூ.190-ஆக அதிகரித்துள்ளதால் மக்கள் அதிர்ச்சியடைந்து உள்ளனர். வரும் நாட்களில் ஆயுத பூஜை, தீபாவளி என்று தொடர்ச்சியாக பண்டிகை நாட்கள் வரவுள்ளதால் நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய்களின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று வெளியாகி இருக்கும் தகவல் பொதுமக்கள் கலக்கமடைய செய்துள்ளது. மேலும் இந்த விலையேற்றம் காரணமாகப் பொதுமக்களின் மாதாந்திர மளிகைச் செலவு கணிசமாக அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

# தேனி மாவட்டம் புதிதாக சுயதொழில் தொடங்க உள்ள 29 தொழில்முனைவோர்களுக்கு ரூ.6.6 கோடி வங்கிக் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் வழங்கினார்

தேனி அக்.7-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்ட தொழில் மையம், தாட்கோ, தமிழ்நாடு மாநில நகர்ப்புற / ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) ஆகிய துறைகளின் சார்பில் சிறப்பு கடன் விழிப்புணர்வு மற்றும் வசதியாக்கல் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) துறையின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும், தொழில்முனைவோருக்கு தேவையான வங்கிக் கடன்கள் தடையின்றி விரைவாகக் கிடைப்பதை உறுதிசெய்திடும் வகையிலும் பல்வேறு திட்டங்களைசெயல்படுத்தி வருகிறது.



அதன்படி, வங்கிகள், மாவட்ட தொழில் மையம், தாட்கோ மற்றும் மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலமாக தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறுகடன்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சுயதொழில் தொடங்க விருப்பமுள்ளவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகையால், நமது மாவட்டத்திற்கு ஏற்றவாறு சுயதொழிலை தேர்வு செய்து தொழில் தொடங்க வேண்டும். அந்த வகையில், சுயதொழில் தொடங்குவதற்கு மிகவும் ஏற்ற மாவட்டமாக நமது மாவட்டம் திகழ்கிறது. சுயதொழில் தொடங்க விரும்புவோர் முன்கூட்டியே திட்டமிட்டு மிகவும் தெளிவான புரிதலுடனும், சுயதொழில் முன்அனுபவம் பெற்றவர்களின் அனுபங்களைக் கேட்டறிந்தும் சுய தொழிலை தொடங்க வேண்டும். அதுமட்டுமின்றி. கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக போட்டோகிராபி பயிற்சி, வீடியோகிராபி பயிற்சி, சிசிடிவி சர்வீஸ், மொபைல் சர்வீஸ், தையல் பயிற்சி, அழகு கலைப்பயிற்சி, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு சுய தொழில் பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிறுவனத்தில் தங்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்று சுயதொழில் தொடங்கலாம்.

இம்முகாமில் சுயவேலைவாய்ப்பு கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்டு வங்கிகளில் நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கவும், பயனாளிகளுக்கு விரைவாகக் கடன் தொகையை வழங்கிடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளிலிருந்து பெறும் கடனுதவிகளை தொழில் தொடங்கும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தி சிறந்த தொழில்முனைவோராக உருவாக வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, ஐடிபிஐ உள்ளிட்ட பல்வேறு வங்கிகளின் சார்பில் குடிநீர் சுத்திகரிப்பு மையம், கட்டுமானப் பொருட்கள் வாடகை மையம், பேக்கேஜிங் தொழில், கார் சர்வீஸ் மையம், எலக்ட்ரிக் சார்ஜிங் ஸ்டேசன், தையல் தொழில் நிலையம், துணி வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு சுயதொழில் தொடங்க உள்ள 17 நபர்களுக்கு ரூ. 5.20 கோடி வங்கிக் கடனுதவிகளும், மாவட்ட தொழில் மையம் சார்பில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டதின் கீழ் 5 பெண் தொழில்முனைவோர்களுக்கு (பயணியர் ஆட்டோ) ரூ.19.75 இலட்சம் வங்கிக் கடனுதவிகளும், தமிழ்நாடு மாநில நகர்ப்புற / ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் 7 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1.21 கோடி வங்கிக் கடனுதவிகளும் என மொத்தம் 29 பயனாளிகளுக்கு ரூ.6.6 கோடி வங்கிக் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும், இம்முகாமில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி ஊரக சுயவேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம், மாவட்ட தொழில் மையம், தாட்கோ போன்ற துறைகளின் மூலம் உதவி மையம் அமைக்கப்பட்டு, வருகைதந்த தொழில்முனைவோர்களுக்கு கடன் வசதியாக்கல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்). வீராச்சாமி, மாவட்ட வளர்ச்சி மேலாளர்(நபார்டு) மரு.ராபின்சன் ராஜா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்.நேதாஜி, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்).முகமது மசூத், மாவட்ட மேலாளர் (தாட்கோ) .சுந்தர்ராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், வங்கியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொது அறிவிப்பு

**திருப்பத்தூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்**
**GWOP.NO: 68/2026**

மேற்படி வழக்கில், மைனர் R. கன்னிகாஸ்ரீ அவர்களுக்கு பாத்தியப்பட்ட, திருப்பத்தூர் மாவட்டம் & வட்டம், பூங்குளம் கிராமம் சர்வே எண். 20/8 – புஞ்சை எக்டர் 0.10.00

சர்வே எண். 20/6 – புஞ்சை எக்டர் 0.01.00 (இதில் 0.02½ சென்ட் கிணற்றில் 1/6 பங்கு பாத்தியம், 3 HP மின்சார பம்புசெட் சர்வீஸ் எண். 632–ல் 1/6 பங்கு பாத்தியம்)

ஆகிய சொத்துக்களை விற்பனை செய்ய மனுதாரர்கள் நீதிமன்ற அனுமதி கோரியுள்ளனர்.

இதற்கு யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், வருகின்ற 03.11.2026 அன்று காலை 10.00 மணிக்கு திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவிக்கலாம். தவறினால் ஒருதலைப்பட்சமாக வழக்கு முடிவு செய்யப்படும்.

**மனுதாரர்கள்:**
**1. R. கௌசல்யா,**
**2. மைனர் R.கன்னிகாஸ்ரீ,**
**கதவு எண். 4/200, லத்தி வட்டம்,**
**பூங்குளம், வாணியம்பாடி வட்டம்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

# திண்டுக்கல் அருகே காவல் நிலையத்திற்கு கையெழுத்து போடச் சென்ற குற்றவாளி வெட்டி கொலை

திண்டுக்கல், அக்.7-

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்திற்கு கையெழுத்து போடச் சென்ற கொலை குற்றவாளி வீரபத்திரன் என்பவர் பட்டப் பகலில் மர்ம கும்பல் வெட்டிக் கொலை செய்துள்ளனர். கணவன் மற்றும் மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையம் சென்றபோது இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.



திண்டுக்கல் மாநகராட்சி குத்தகைதாரராக இருந்து வந்த முருகன் என்பவர் கடந்த ஆண்டு நத்தம் அருகே காரில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை வழக்கில் திண்டுக்கல் மேட்டுப்பட்டியை சேர்ந்த வீரபத்திரன் என்பவர் முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்ட குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவர் நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்து தினமும் சாணார்பட்டி காவல் நிலையத்தில் கையெழுத்து போடு வந்துள்ளார். இந்நிலையில் இன்று தனது மனைவியுடன் இருசக்கர வாகனத்தில் சாணார்பட்டி காவல் நிலையத்திற்கு நிபந்தை ஜாமீன் கையெழுத்து போடு வீட்டுக்கு திண்டுக்கல் நோக்கி நொச்சி ஓடைப்பட்டி அருகே காரில் பின்னால் வந்த மர்ம நபர்கள் வீரபத்திரனை வழிமறித்த அவரை சாலையில் வைத்து கொடூரமாக தலையில் வெட்டியுள்ளனர். இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார்.

தாக்குதலின் போது இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த அவரது மனைவி படுகாயமடைந்தார். உடனடியாக அவரை மீட்ட போலீசார், ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த சாணார்பட்டி போலீசார் உடலை மீட்டு பிரேதபரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் உத்தரவின் பேரில், புறநகர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மஞ்சிமா தலைமையிலான தனிப்படை போலீசார் கொலையாளிகளைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# காந்திய கல்வி மையம் , அழகப்பா பல்கலைக்கழகத்தில் காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அகிம்சை தின விழா கொண்டாடப்பட்டது

சிவகங்கை, அக்.7-

காந்திய கல்வி மையம் , அழகப்பா பல்கலைக்கழகத்தில் காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அகிம்சை தின விழா கொண்டாடப்பட்டது





அழகப்பா பல்கலைக்கழகத்தின் காந்தியக் கல்வி மையம், அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி மற்றும் கல்வியியல் துறை ஆகியவற்றுடன் இணைந்து 157-வது காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அகிம்சை தின விழா 2026 நிகழ்வை 06.10.2026 அன்று காலை 10.30 மணிக்கு, அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி கருத்தரங்க அரங்கில் சிறப்பாக நடந்தன. இந்நிகழ்விற்கு அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஜெ. இ. மெர்லின் சசிகலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொறுப்பு) பேராசிரியர் ஜெ. ஜெயகாந்தன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி, மகாத்மா காந்தியின் சத்தியம், அகிம்சை, அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் சமூக நல்லிணக்கம் போன்ற உயரிய கொள்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

முன்னாள் முதல்வர் முனைவர் எஸ்.முத்துலட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மகாத்மா காந்தியின் வாழ்க்கை, கொள்கைகள் மற்றும் அகிம்சைச் சிந்தனைகள் இன்றைய காலகட்டத்திலும் எவ்வாறு பொருத்தமானதாக உள்ளன என்பதை அவர் எடுத்துரைத்தார். மற்றும் முனைவர் வனிதாமணி முன்னாள் பேராசிரியை யாதவா கல்லூரி மதுரை அவர்கள் இன்றைய சமூகத்தில் காந்திய சிந்தனைகளின் அவசியத்தையும், மாணவர்களிடையே பொறுப்புணர்வு மற்றும் அமைதியான வாழ்வியல் மதிப்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் சி. வேதிராஜன் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பேராசிரியர் எம். ஜோதிபாசு மற்றும் கல்வியியல் புல முதன்மையர் மூத்த பேராசிரியர் ஜி.கலையரசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அவர்கள் மாணவர்களிடையே காந்திய மதிப்பீடுகள், அகிம்சை மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வளர்ப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தனர்.. காந்தியக் கல்வி மையத்தின் துணை இயக்குநர் என். சசிகுமார் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் கல்வியியல் துறை மற்றும் கல்வியியல் கல்லூரியின் பேராசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். காந்தியடிகளின் சத்தியம், அகிம்சை, அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகிய உயரிய கொள்கைகளை நினைவுகூரும் வகையில் இவ்விழா அமைந்தது.

# சிவகங்கை மாவட்டத்தில் அக்.31 வரை பிஎம்-கிசான் சிறப்பு முகாம்

## ஆதார்வங்கிக் கணக்கு இணைப்பு, e-KYC முடிக்காத விவசாயிகள் பயன்பெற ஆட்சியர் அழைப்பு

சிவகங்கை: அக்.07-

சிவகங்கை மாவட்டத்தில் பிஎம்-கிசான் நிதித் திட்டத்தின் கீழ் ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைக்காத மற்றும் e-KYC பதிவு செய்யாத விவசாயிகளுக்காக, அக்டோபர் 31-ம் தேதி வரை அனைத்து கிராமங்களிலும் பிஎம்-கிசான் நிறைவுறல் முகாம்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், தெரிவித்துள்ளார்.

இந்த முகாம்களை வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

பிஎம்-கிசான் கௌரவ நிதித் தொகையைப் பெறுவதில் ஏதேனும் சிக்கல் உள்ள விவசாயிகள், தங்களது பகுதி உதவி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்களைத் தொடர்புகொண்டு, தங்களது கிராமத்தில் முகாம் நடைபெறும் நாளை அறிந்து கொள்ளலாம். தேவையான ஆவணங்களின் நகல்களுடன் முகாமில் பங்கேற்று சந்தேகங்கள் மற்றும் பதிவுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

சிவகங்கை மாவட்டத்தில் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத விவசாயிகள் 1,864 பேர், e-KYC முடிக்காதவர்கள் 2,446 பேர், இந்த இரண்டையும் செய்யாதவர்கள் 447 பேர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட விவசாயிகள் தாமாக முன்வந்து ஆதார்வங்கிக் கணக்கு இணைப்பு மற்றும் e-KYC பதிவை நிறைவு செய்து, பிஎம்-கிசான் ஊக்கத் தொகையை தடையின்றி பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்..



# மானாமதுரையில் அகமுடையார் சங்க ஆலோசனைக் கூட்டம்: ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் ஜெயமாரி விழிப்புணர்வு உரை

மானாமதுரை அக்.07-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் அகமுடையார் சங்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சாந்தி முருகன் மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கௌரவத் தலைவர் அழ. முருகன் தலைமை தாங்கினார். சங்கத் தலைவர் சாந்தி முருகன், செயலாளர் ஜி. சண்முகம், பொருளாளர் ஏ. சண்முகம் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் ஜெயமாரி பேசியதாவது:

"சமுதாயத்தில் உள்ள குழந்தைகள் மற்றும் மாணவ-மாணவிகளை நல்ல முறையில் படிக்க வைக்க வேண்டும். இளைஞர்கள் எக்காரணத்தைக் கொண்டும் தவறான பாதையிலோ, அராஜக வழிகளிலோ செல்லாமல் கல்வி மற்றும் நல்வழியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான கல்வி உதவிகளைச் செய்து படிக்க வைக்க சமுதாய மக்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும்" என்று விழிப்புணர்வு கருத்துக்களை வலியுறுத்திப் பேசினார்.

தொடர்ந்து, வரும் அக்டோபர் 24 மற்றும் 27 ஆகிய தேதிகளுக்குப் பிறகு சங்கத்தின் நலத்திட்ட உதவிகள், செயல்பாடுகள் மற்றும் சமுதாய வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக ஆலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# மானாமதுரையில் அக்.8-ல் மின் பயனீட்டாளர்கள் குறைதீர்க்கும் கூட்டம்

## மின்வாரியம் தொடர்பான குறைகளை நேரில் தெரிவித்து தீர்வு பெற அழைப்பு

மானாமதுரை: அக்,7-

சிவகங்கை மின் பகிர்மான வட்டம் சார்பில் மானாமதுரை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை அக்டோபர் 8-ம் தேதி நடைபெற உள்ளது.

சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் பொறிஞர் எஸ்.பி. கலாவதி, தலைமையில், மானாமதுரை செயற்பொறியாளர் / பகிர்மானம் அலுவலகத்தில் காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை கூட்டம் நடைபெறுகிறது.

மானாமதுரை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள், மேற்பார்வைப் பொறியாளரை நேரில் சந்தித்து மின்வாரியம் தொடர்பான தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை தெரிவித்து நிவர்த்தி பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, மின் பயனீட்டாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மானாமதுரை பகிர்மான செயற்பொறியாளர் தேன்மொழி கேட்டுக்கொண்டுள்ளார்..




■ மதுரை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளைச் சிறப்பிக்கும் வகையில் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்கள் வழங்கும் செயல்முறையைப் பார்வையிட்டு, பின்னர் குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்களை வழங்கினார்.



■ மதுரை மாவட்ட, அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை சார்பில் நடத்தப்பட்ட மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு பயிலரங்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா துவக்கி வைத்து மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். அக்டோபர் மாதம் உலகம் முழுவதும் "PINK OCTOBER" என மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம், மார்பகப் புற்றுநோய் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவதன் அவசியத்தை வலியுறுத்துவதும் ஆகும்.




# நல்லூர் ஊராட்சி காந்திநகரில் ஸ்ரீ விஸ்வகர்மா ஜெயந்தி விழா

மாதவரம், அக்.7-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி காந்தி நகர் பகுதியில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கிராம பொதுநலச்சங்க மண்டபத்தில், தமிழ்மாநில விஸ்வகர்மா ஐந்தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஸ்ரீ விஸ்வகர்மா ஜெயந்தி விழா நடைபெற்றது. சங்கத்தின் மாநில தலைவர் பிரம்மஸ்ரீ வேல்முருகன் ஆச்சாரி, மாநில பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ பாலசந்தர் ஆச்சாரி, மாநில அமைப்பு செயலாளர் பிரம்மஸ்ரீ மணிகண்டன் ஆச்சாரி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.மாநில துணைத்தலைவர் ஸ்பதிபாலாஜிஆச்சாரி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் அம்பாள் திருஉருவ படத்தை வைத்து கணபதி ஹோமத்துடன் பல்வேறு சிறப்பு பூஜைகள் மற்றும் மஹா தூபதீப ஆராதனை நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக 65-வது மடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவராஜ ஞானாச்சார்ய குரு சுவாமிகள், கே.ஆர்.வி கல்வி அறக்கட்டளை நிறுவனர் கே.ஆர். வெங்கடேசன், ஏ.கே.ஆர். அறக்கட்டளை நிறுவனர் குமரன், சன் டிவி புகழ் ஜோதிட ரத்னா கே.பி. வித்யாதரன் ஆச்சாரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் குழுத் தலைவர் பிரம்மஸ்ரீ மோகன் ஆச்சாரி, அறங்காவலர் பிரம்மஸ்ரீ சர்வேஷ்வரன் ஆச்சாரி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு விஸ்வகர்மா ஜெயந்தி விழாவை சிறப்பித்தனர்.




# புனரமைப்பு செய்யப்பட்ட செங்குன்றம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் திறப்பு விழா

மாதவரம், அக்.7-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் தேர்வுநிலை பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ. 2 கோடியே 71 இலட்சத்து 50 ஆயிரம், பொது நிதி ரூ. 97 இலட்சத்து 50 ஆயிரம் மொத்த ரூ. 3 கோடியே 69 இலட்சத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட செங்குன்றம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் திறப்பு விழா நடைபெற்றது.திருவள்ளூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் விஜயலக்ஷ்மி, நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் மேற்கு மாவட்டசெயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு புனரமைப்பு செய்யப்பட்ட செங்குன்றம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தை திறந்து வைத்தும், புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்து பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புடன் அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். முன்னதாக அறிஞர் அண்ணா, அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இதில் செங்குன்றம் பேரூராட்சி கவுன்சிலர்கள் லீலாவதி சாந்தகுமார், கோமதி பாஸ்கர், தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் விஜி, இணைச் செயலாளர் பைரவா வினோத், பொருளாளர் சுரேஷ், துணைச் செயலாளர்கள் மணிகண்டன், காதர், மாதவரம் கார்த்திக், மகளிர்கள் பவானி, ஷாலினி உள்ளிட்ட ஒன்றியச் செயலாளர்கள், தவெக நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உங்களுக்கே இது அபத்தமா தெரியல... GST வரி குறைப்பை சாதனையாக மார்தட்டி கொள்ளும் தவெக-வுக்கு சுளீர் கேள்வி

சென்னை, அக்.7-

நாடு முழுவதும் சில பொருட்களுக்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட ஜி.எஸ்.டி. வரிக் குறைப்பை, தவெக அரசு தன்னுடைய சாதனையாக கூறி, மார்தட்டிக்கொள்வது அபத்தமானது என்று திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி சாடியுள்ளார்.



இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர், ஜிஎஸ்டி மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் நிதியிழப்பைத் தொடர்ந்து சுட்டிக்காட்டி, அதற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகிறது தி.மு.க. ஆனால், கடந்த மூன்று மாதங்களாகத் தமிழ்நாட்டின் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் தொடர்ந்து சரிந்து வருகிறது. செப்டம்பர் மாதத்தில் மட்டும் 5% குறைந்துள்ளது. விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் அன்றாடத் தேவைகளுக்குக்கூட செலவழிக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தற்போது வாங்கும் சக்தி குறைந்து, மக்களின் நுகர்வு குறைவதன் தாக்கம்தான் தமிழ்நாட்டின் ஜிஎஸ்டி வரி வசூல் சரிவிலும் வெளிப்படுகிறது. நாடு முழுவதும் சில பொருட்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஜி.எஸ்.டி. வரிக் குறைப்பைத் தன்னுடைய சாதனையாக தவெக அரசு மார்தட்டிக்கொள்வது அபத்தமானது. தமிழ்நாட்டில் தொடர்ந்து உயர்ந்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த அரசு என்ன நடவடிக்கை தான் இதுவரை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

# 2019-ல் உயிரிழந்த பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த கார்த்திக் வழக்கு: குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை: தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வலியுறுத்தி தேனி கலெக்டரிடம் மனு

தேனி, அக்.7-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே ஜெயமங்களம் கிராமம் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் கடந்த 2019-ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு தினத்தன்று சமூக விரோதிகளால் கொலை செய்த சம்பவம் தொடர்பான வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தனர். ஜெயமங்களம் கிராமத்தை சேர்ந்த கார்த்திக் 2019-ம் ஆண்டு ஜனவரி 1-ந்தேதி ஆங்கில புத்தாண்டு தினத்தன்று உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து, வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, தொடர்ந்து



நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு, மேல்முறையீடு செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக மக்கள் விடுதலைக் கட்சியின் மேற்கு மாவட்ட செயலாளர் பூமிநாதன், சமூக ஆர்வலர் ராஜேஷ், வழக்கறிஞர் தேனி கோல்டுபாண்டி, மாவட்ட தலைவர் பால்பாண்டி, மேற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் மற்றும் கார்த்திக் உறவினர்கள் உள்ளிட்டோர் தேனி மாவட்ட கலெக்டர் வைத்தியநாதனை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில், கார்த்திக் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் நடைபெற்ற விசாரணை மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து உரிய சட்ட ஆலோசனை மேற்கொண்டு, தமிழக அரசு சார்பில் மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உரிய சட்டப் பாதுகாப்பும் நீதியும் கிடைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். மேலும், இவ்வழக்கில் மேல்முறையீடு செய்வதற்கான சட்ட நடைமுறைகளை விரைந்து மேற்கொண்டு, சம்பவம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனுதாரர்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161